

ஸ்ரீ ஸதாசிவபிரம்மேந்திரர்கள் ஸமாதி, நெரூர்.

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 9.

பிங்கள௵ புஷ்ய சுத்தபஞ்சமி.

வியாஸாசலீயம்.

(முன்தொடர்ச்சி.)

अनुनीय स मातरं प्रतस्थे प्रतिवाक्यैरिति तां निरुत्तरैस्तैः ।
अथ तं तपसे प्रयान्तमाराज्जननी वाग्भिरमूभिरर्थयत्सा ॥ १ ॥

அந்த குருவானவர், தம் வசனங்களுக்கு மறுத்து பதில்கூற முடியாத சில வாக்கியங்களால் அன்னைக்கு மறுமொழி யுரைத்து அவளனுமதியின்பேரில் அரண்யத்திற்குப் புறப்பட்டார். அவ்விதம் தவம் செய்யப் புறப் படும் மைந்தனருகிற் சென்று அவர் தாயாரும் பின் வருமாறு சில வாக்கியங்களாலவனைப் பிரார்த்தித்தாள்.

तोषं प्रयाहि परिपूजय शंकरं त्वं कार्यं विधाय पुनरेहि ममान्तिकाय ।
त्वां पश्यतां सुतमिवौरसमात्तहार्दौ श्रीपार्वतीपुरहरौ प्रणतामरौघौ ॥ २ ॥

அப்பா, சந்தோஷமாய்ச் செல்லு. ஸ்ரீ சங்கரரைப் பூஜை செய். நீ உன் காரியத்தை முடித்துக்கொண்டு

மறுபடியும் என் சமீபத்தில் வந்துசேரு. விண்ணவர்களால் வணங்கக் கூடியவர்களாயும் மிகுந்த தயையுடையவர்களான ஸ்ரீபார்வதி தேவியென்ன பரமேசுவரனென்ன இவ்விருவர்களும் உன்னை அவர்களுடைய வயிற்றில் உண்டான புதல்வனைப்போல் கவனிப்பார்கள்.

त्वं तात पूजय शिवं करुणाम्बुराशिं पञ्चाक्षरीविधिमुपाश्रय शुद्धचेताः ।
नात्रोपनीतिनियमोऽखिलजीवनत्वात्सर्वाधिकारपदमेनमुशन्ति सन्तः ॥३॥

அப்பா குழந்தாய், கருணைக்கடலான சிவபெருமானை நீ பூஜை செய். சுத்தமான மனமுடையவனாய்க்கொண்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரீ என்ற ஜபத்தை நன்கு அனுஷ்டானம் பண்ணு. இம்மந்திரம் சகல ஜனங்களுக்கும் முக்கியமாகையால் இதற்கு உபநயநமாக வேண்டுமென்கிற நியமமில்லை. யாவருமிதை ஜபிக்க அதிகாரிகளென்று ஆன்றோர் கருதுகின்றார்கள்.

अनुयतोऽपि निवर्त्य सुहृज्जनान्स्थिरमतिः स्मितशोभिमुखाम्बुजः ।
परिहरन्ममतां गृहगोचरां हृदयगेन शिवेन समं ययौ ॥ ४ ॥

இவ்விதம் தாயினுடைய உபதேசத்தைப் பெற்றுத் தன்னுடன் பின்தொடரும் மித்திரர்களைத் திருப்பிவிட்டு வீடு முதலியவைகளிலிருக்கும் தன்னுடையதென்கிற மமகாரத்தை விட்டு உறுதியான மதியுடனும் மந்தஹாஸத்தால் விளங்கும் முகத்தையுடையவனுயுமிருக்கும் சிறுவன் தன்சிந்தையில் விளங்கும் சிவபெருமானையே துணையாகக்கொண்டு கானகம் சென்றான்.

किमयमग्निरथो वनदेवता पथिजनैरिति चिन्तित एकः ।
व्रजति भोक्तुमना न च याचते विधिवितीर्णकृतात्महितः शिशुः ॥ ५ ॥

இவ்விதம் போகும் சமயத்தில் மார்க்கத்திலிருக்கும் ஜனங்களால் இவன் அக்னியோ அல்லது வனதேவதையோ என்று சங்கிக்கப்பட்டவராய்க் கொண்டு ஒருவராகவே

ஆகாரத்திற்காக ஒருவரையும் யாசிக்காதவராய் ஈசனு லளிக்கப்பட்ட ஆத்மஹிதத்தை யடையவேண்டி விரை விற் சென்றார்.

व्रजसि कुत्र वटो! कुत आगतः किमभिवाञ्छसि कस्य तनूभवः ।
पथि जनैरिति पृच्छत एव स प्रतिगिरं न ददाति निराकुलः॥ ६ ॥

மார்க்கத்தில் சில ஜனங்களால் 'ஹே வடோ' என்று இவரைக் கூவி 'நீர் எங்கிருந்து வருகிறீர்? எங்கு போகி றீர்? எதை விரும்புகிறீர்? நீர் யாருடைய புத்திரர்?' என்று ஆங்காங்கு வினவப்பட்டாலும் அவர்களுக்கு யா தொரு விடையுமளிக்காமல் மிகுந்த தைரியத்துடன் சென்றார்.

बहुजलाः सरितः समहीधरान्जनपदानपि काश्चिदतीत्य सः ।
पथि गतः परितो गतलोचनो वनमपश्यदयं तरुमण्डितम् ॥ ७ ॥

இந்த மாதிரி சென்றுகொண்டிருக்கையில் மத்தியி லிருக்கும் அதிக ஜலப்பிரவாகங்களையுடைய நதிகளையும் பருவதங்களொடுகூடிய சில தேசங்களையும் தாண்டி நாலு பக்கங்களிலும் பார்க்கும் சமயத்தில் பல விருக்ஷங்களா லலங்கிரிக்கப்பட்ட ஒரு வனத்தை இவர் கண்ணுற்றார்.

सुकुरङ्गसमाकुलमेकतो भयदसूकरयूथनिषेवितम् ।
अपरतो गजयूथपभीषणं किलिकिलारवधूतवलीमुखम् ॥ ८ ॥

அவ்வனமானது சிறந்த மான் கூட்டங்களால் நிறைந் ததாயும் ஒரு பக்கத்தில் பயங்கரமான பன்றிக் கூட்டங்க ளால் சேவிக்கப்பட்டதாயும் மற்றொரு பக்கத்தில் கஜபதிக ளால் பயங்கரமாயும் வேறொரு பக்கத்தில் கிலிகிலா என்ற சப்தத்துடன் ஓடுகின்ற குரங்குகளையுடையதாயும் இருந் தது.

सरणिमुज्झितवान्गहनाटवीमुपविवेश समीहितलक्षणाम् ।
अथ सरः समुदीक्षितवान्पुरो निवसनाय मनोधितबालकः ॥ ९ ॥

உடனே பாலகரான அந்த துருவர் வந்த நெறியை விட்டுத் தாம் விரும்பிய லக்ஷணத்துடனிருக்கும், இருள டைந்த அக்கானகத்தில் சென்றார். அங்குச் சென்றபிறகு தமக்கெதிரில் ஒரு தடாகத்தையும் பார்த்தார். அவ்வி டத்திலேயே வசிக்கவேண்டுமென்கிற தோற்றமுமுண்டா யிற்று.

विमलनीरसरोवरतीरगस्तटमहीधरमूलमुपाश्रयत् ।
स्थिरधियां विपिनं सदनायते सदनमल्पधियां विपिनायते ॥ १० ॥

அதன் பிறகு மிகவும் சுத்தமான ஜலத்தையுடைய சிறந்ததான அக்குளக் கரையைச் சென்று அங்கு விளங் கும் விருக்ஷத்தின் அடிப்பிரதேசத்தை யடைந்தார். சுக மாய் நல்ல வீட்டில் வசித்தவர்களுக்கு அரண்ய வாசத் தில் திருப்தி யுண்டாகுமாவென்று சங்கிப்பவர்களுக்கு சமாதானம் கூறுகின்றார். அதாவது உறுதியான புத்தி யையுடையவர்களுக்கு வனமே வீடாகின்றது. அற்ப அறிவுடையோர்களுக்கு வீடும் வனமாய் விடும்.

किसलयोत्तरदर्भतृणाङ्कुरैर्व्यवहितां प्रविधाय मनोरमाम् ।
उपनिविश्य ततो हरिदिङ्मुखो गदितमन्त्रमुदाहरदैश्वरम् ॥ ११ ॥

அவ்விடத்தில் புல் தர்ப்பம் தளிர் இவைகளைப் பரப்பி நேர்த்தியாயிருக்கும் பூமியில் கிழக்கு முகமாய் உட் கார்ந்து தாயாராலுபதேசிக்கப்பட்ட ஈசுவரரைத் தேவதை யாக உடைய பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபித்தார்.

पृथुलदीर्घममुं तटरोहिणीं व्यधितवल्लिमसौ कटिसूत्रकम् ।
मनुवरे शिवदैवतविग्रहे विदधात्ममनोविषयोपगम् ॥ १२ ॥

பின்னுமவர் தபசுக்கு உட்காரும் காலத்தில் நீண்ட தாயும் பருமனுமுமிருக்கும் கொடியைக் கடிசூத்திரமாகக் கட்டிக்கொண்டு பரசிவனைத் தேவதையாகவுடைய சிறந்த மந்திரத்தைத் தியானம் செய்தார்.

मुनिरथ जपति स्म पुरोदितं नयनमर्धनिमीलितमुद्वहन् ।
मुनिजनोचितवृत्तिरसौ सकृत्रिषणं सरसीकृतमज्जनः ॥ १३ ॥

தவம்செய்ய ஆரம்பித்த பிறகு ஒவ்வொரு தினமும் மூன்று காலங்களிலும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவராயும் மகரிஷிகளுக்குசிதமான விருத்தியை யுடையவரான இந்த முனியானவர் பாதி மூடப்பட்ட நேத்திரத்தை யுடையவராய்க் கொண்டு முற் கூறிய ஜபத்தை ஜெபித்தார்.

स्थिरनिबद्धसुखासनसंस्थितः विजनतावनितापरितोषितः ।
मितमपीह फलं स निषेवते न च जहाति भृशं स कदाचन ॥ १४ ॥

தமக்குச் சுகத்தைக் கொடுக்கக் கூடியதாயும் உறுதியாயும் ஏற்படுத்தப்பட்ட ஆசனத்திலிருந்துகொண்டு விஜநதா (ஜநமில்லை) என்கிற ஸ்திரீயால் சந்தோஷமடைந்தார். அற்பமான பலத்தையும் ஆகாரமாகக் கொள்வார். ஒரு சமயத்திலும் ஆகாரத்தை அவர் மிகவும் விலக்குவதில்லை.

स्वपिति नात्र भृशं न च जागरं व्रजति बालमुनिर्बहुयोगवित् ।
क्षुधितसिंहगणः सरसीजलं परिपिपासुरिहाटति निर्भयम् ॥ १५ ॥

அநேக யோகத் தவுங்களை யறிந்த இந்தப் பாலமுனியானவர் தவம்புரியுங்கால் அதிநித்திரையையும் செய்யவில்லை. எப்பொழுதும் விழித்துக்கொண்டிருப்பதில்லை. இவரிருக்குமிடத்தில் தாகவிடாய்கொண்ட சிம்மக் கூட்டமானது அச்சமின்றித் தடாகத்தில் தண்ணீர் குடிக்க வந்து கொண்டிருந்தது.

शिशुमुनिं समुदीक्ष्य हरिव्रजश्चकितवत्प्रपलायति दूरतः ।
मृगगणा बहुकालमुदीक्षणात्परिचयं ययुरन्तिकसंश्रयाः ॥ १६ ॥

இவ்விதம் வந்துகொண்டிருந்த சிம்மக் கூட்டமானது சிசுவாயிருக்கும் இம்முனிவரைப் பார்த்துப் பயந்தது போல வெகு தூரம் ஓடிற்று. மற்றுமுள்ள மான் முதல

லிய மிருககணங்கள் யாவும் வெகுகாலம் பழகிய பிறகு பயமின்றி அவரருகிற் சென்றன.

अथ तरक्षुरुपागमदेकदा मृगगणानुगतो मृगभक्षकः ।
मृगगणे गतवत्यतिरोषणः शिशुमुनेः पुरतः स जगर्ज च ॥ १७ ॥

இவ்விதம் தவம் செய்து கொண்டிருக்கும்பொழுது ஒரு சமயம் மிருகங்களை உணவாகக் கொண்டதாயும் பல மிருகங்களால் பின் தொடரப்பட்டதுமான ஒரு புலியானது இவர் சமீபத்தை யடைந்து இதர மிருகங்களெல்லாம் கிரமமாகச் செல்லவும் மிகவும் கோபத்துடன் கூடிய அப்புலி மாத்திரம் சிசு முனியான இந்த துருவருக்கு முன் நின்றுகொண்டு கர்ச்சனை செய்தது.

श्रुतवतः श्रुतिभेदि च गर्जितं शिशुमुनेरुदियाय भयं मनाक् ।
शिव शिवेति तदा स्मरदक्षरं स पतति स्म परासुरधोमुखः ॥ १८ ॥

காதைப் பிளக்கிறதான அந்தக் கர்ச்சனையைச் செவியுற்ற சிசுமுனிக்கு அற்ப பயமுண்டாயிற்று. உடனே அறிவிழந்தவராயும் கீழ் வணங்கிய முகத்துடனும்கூடிய அந்தத் துருவர் சிவசிவ என்கிற எழுத்துக்களை ஸ்மரிப்பவராய்க்கொண்டு பூமியில் விழுந்தார்.

वनगजा बहुबृंहितकारिणः सतृष एव जलमाशयमाविशन् ।
मुखविधुं समुदीक्ष्य मुनेः शिशोः मुदितचित्ततयापि तृषोऽभवन् ॥१९ ॥

இந்தச் சமயத்தில் அக்கானகத்திலிருக்கும் மிகவும் கம்பீரமான கர்ச்சனை செய்யும் கஜங்கள் தாகத்துடன் கூடியதாய்க் கொண்டு குளங்களிற் பிரவேசித்ததான. அப்புலியானது இம்முனியினுடைய முகசந்திரனைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்து பசியில்லாததாக ஆய் விட்டது.

तत इतोज्वलदत्तसमुज्वलः शिशुमुनेर्ज्वलनो धुरि यो वने ।
स च शशाम तदागममात्रतः सुखमभूद्विपिने बहुलद्रुमे ॥ २० ॥

இருவர் வருவதற்கு முன் அந்த வனத்தில் பல விடங்களிலும் யாதொரு அக்கினியானது நன்கு பிரகாசித்துக்கொண்டு மரங்களை தகித்துக் கொண்டிருந்ததோ அந்த அக்கினியானது இவர் வந்த மாத்திரத்தில் சமனத்தை யடைந்தது. அநேக மரங்களுடன்கூடிய அவ்வனமும் நன்கு விருத்தி யடைந்தது.

गजमृगेन्द्रतरक्षुमृगादयः सहजवैरिनिकेतनमानसाः ।
विजहतो निजवैरमनश्वरं परिपपुः सहिताः सरसीजलम् ॥ २१ ॥

ஒன்றுக்கொன்று மனத்திலியற்கையாய் ஏற்பட்ட சத்துருபாவத்தை யுடையதான யானை, சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்கள் யாவும் தங்களுக்கிருக்கும் அதிகமான வைரத்தை விட்டுவிட்டு ஒரே துறையில் சேர்ந்து நீர் அருந்தின.

(இன்னும் வரும்.)

ஒரு சம்பாஷணை.

பாலசந்திர தீக்ஷிதருக்கும் குமுதாகார சாஸ்திரிகளுக்கும் நடந்தது.

ஆஸ்திகர்களான இந்தியர்களால் ஐஹிகம், ஆமுஷ்மிகம் என்கிற இருவகையான சிரேயஸ்ஸை யடைவதற்கு முக்கிய ஸாதனமாயங்கீகரிக்கப்படும் சாஸ்திரங்களுக்குள் ஸ்ரீ பகவத்கீதை என்பதும் ஒன்று. இது ஸ்ரீ கிருஷ்ண பகவானால் அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு லோகோபகாரத்தின் பொருட்டு அரிய பல விஷயங்களுடன் வெளியிடப்பட்டு வெகுகாலமாய் உலகில் நடைபெற்று வருகிறதென்பது பல ஜனங்களுக்கும் தெரிந்த விஷயமே. அவர்களுக்குள் மதபேதத்தை யடைந்தவர்களும் இந்தக் கீதை

யிலிருக்கும் சில சுலோகங்களுக்கு மாத்திரம் மாறுத லான பொருளைக் கருதுகின்றார்களே தவிர வேறுவிதம் கூறவில்லை. இவ்விதமிருக்க சொற்ப காலத்திற்கு முன் இது சரியான கீதை யல்லவென்று அத்தியாயங்களையும் சுலோகங்களையும் தங்களுக்குத் தோன்றியவாறு பலவா ருய்க் கற்பித்துப் புதிதானபொருளையுமவைகளுக் கேற் படுத்தி அதை அச்சிட்டு வெளியிட்டிருப்பதைக் கண் ணுற்ற ஆஸ்திகர்களுக்குண்டான துக்கத்தை விலக்கக் கருதி அந்தக் கீதை சரியல்லவென்று சரியான பிரமாணங் களால் ஸம்ஸ்கிருத பாஷையில் கீதாதாசரால் சம்பாஷணை மூலமாய் பிரிஸித்தி செய்யப்பட்ட புஸ்தகத்திலிருக்கும் விஷயங்களை எல்லா ஜனங்களும் சுலபமாயறியவேண்டித் தமிழ்ப் பாஷையில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட இதிலிருக்கும் குணங்களைக் கிரகித்துச் சந்தோஷிக்க வேணுமாய்க் கோரப்படுகின்றது.

பாலசந்திரதீக்ஷிதர்—ஓய் குமுதாகார சாஸ்திரியரே, எப் பொழுது வந்தீர் ?

குமுதாகார சாஸ்திரி—சென்னையிலிருந்து இன்றைக் காலை யில்தான் வந்தேன்.

பா—அவ்விடத்தில் உமக்கு என்ன வேலை?

கு—அங்கரில் விளங்குமோர் பெரிய சபையில் என் சகோ தரிகுமாரன் ஜீவனோபாயமாக ஓர் உத்தியோகத்திலி ருக்கிறன்.

பா— இங்கு வந்ததற்கு யாது காரணம்?

கு—சித்சபா நடஞ்கிய ஸ்ரீ பரமேசுவரனுடைய தர்சனம் முதலாவது. இரண்டாவது வெகு காலத்திற்கு முன் பார்க்கப்பட்டவராயும் எனக்கு முக்கியமான மித்திராயுமிருக்கிற உங்கள் தர்சனம்.

பா—உம்முடன் கூட அத்தியயனம் செய்தவனுகிய என்ஜன நீர் மறக்காமலிருக்கிறீர் என்கிற விஷயத்தில் நான் மிகச் சந்தோஷப்படுகிறேன். பகவானுகிய சித்ஸபேசருடைய தர்சனமாய்விட்டதா? ஆகார முதலியன எங்கு செய்யப்பட்டன?

கு—காஞ்சியிலேயே தீன ஜனங்களைப் பக்ஷத்துடன் பாது காக்கும் பரமேசுவரரான ஸ்ரீ சித்ஸபேசரைத் தரிசித்துப் பிறகு என் பந்து கிருகத்தில் உண்டியருந்தி அங்கு அற்ப காலம் சிரமபரிகாரம் செய்துகொண்டு இப்பொழுது மித்திரரத்னமான உங்களைப் பார்த்தேன்.

பா—அப்படியானல் சவாகாசமாய் வெளியிலிருக்கும் திண்ணையிலேயே உட்காருவோம்.

கு—அப்படியே செய்வோம். (இருவரும் திண்ணைக்கு வந்தார்கள்.)

பா—உம்து பந்துக்களோடுகூட நீர் சௌக்கியமாயிருக்கிறீரா?

கு—தங்கள் ஆசீர்வாதத்தால் நாங்களனைவரும் சௌக்கியமே. தங்களுக்கும் சௌக்கியம்தானே?

பா—ஆம் ஈசனருளால் சௌக்கியம்தான். கையில் இருக்கின்றதென்ன? புதிதாய் அச்சிடப்பட்ட புஸ்தகம் போல் தோன்றுகிறதே?

கு—உண்மைதான். மிகவும் புதிதான புஸ்தகம். உங்களுக்குத்தான் கொண்டு வந்தேன்.

பா—அடே மிகவும் புதிதென்று கூறப்பட்ட இப்புத்தகம் என்ன? யாராவதொருவரால் இயற்றப்பட்டதோ?

கு— அப்படித்தான். இது கீதாசாஸ்திரம். புதிதுதான்.

பா—இது எந்த கீதை?

கு—ஸ்ரீ பகவானால் சொல்லப்பட்ட கீதைதான்.

பா—இதுவும் அர்ச்சுனன் பொருட்டு உபதேசிக்கப்பட்டதாயும் வியாசரால் கூறப்பட்டதாயும் மகாபாரதமத்தியிலிருக்கும் கீதை தானா?

கு—உண்மையில் அதுதான்.

பா—அப்படியானால் இதைப் புதிதென்று எப்படிக் கூற முடியும்? இது பிராசீனமல்லவா?

கு—இதில் விசேஷமிருக்கின்றது. யாதொரு கீதையானது உங்களால் அங்கீகரிக்கப்படுகின்றதோ அது அசுத்தமானது.

பா—கீதையும் அசுத்தியென்கிற பெயரை யடைந்து விட்டதா? கஷ்டம் கஷ்டம். கலியின் விலாசம் இப்படியும் ஏற்படும். இருக்கட்டும். அதிலிருக்கும் விசேஷங்களையும் கேட்போம். நவீன கீதைக்கும் பகவத் கீதைக்கும் இருக்கும் வேற்றுமையைச் சொல்லும்.

கு—தற்கால உலகில் விளங்கும் கீதா சாஸ்திரமானது 700 சுலோகங்களுக்குள்ளடங்கிய 18 அத்தியாயத்துடன் கூடியதென்று பிரஸித்தம்.

பா—அது உண்மைதான். புதியதான இந்தக் கீதை எப்படி இருக்கின்றது?

கு— இதுவா? 744 சுலோகங்களுடன் கூடிய இருபத்தாறு அத்தியாயங்களை யுடையது.

பா—கஷ்டம். இவ்விதம் ஒரு கீதை யுண்டாய் விட்டதா?

கு—கீதை என்று கூறப்படுவதே இதுதான்.

பா—இதுதான் கீதை யென்பதற்கு பிரமாணமென்ன?

கு— இதற்கு பிரமாணம் சொல்லுகிறோம். இதற்கு நீர் பதில் சொல்லும். கீதை 18 அத்தியாயம்தான்.

எழுநூறு சுலோகாத்மகம்தான் என்பதற்கு பிரமாணமென்ன?

பா—இதற்கும் பிரமாணம் வேண்டுமோ? சந்தேகமுள்ள இடத்திற்கன்றோ பிரமாணம் வேண்டும். கீதை பதினெட்டு அத்தியாயந்தான் என்பது எல்லோராலும் நன்கறியப்பட்ட விஷயமே. ஸகுணம், நிர்குணம், சிவன், விஷ்ணு முதலிய பலவிவாதங்களைக்கூறும் வாதிகளும் கீதா சாஸ்திர விஷயத்தில் அவரவர்கள் அபிப்பிராயத்திற்குப் பிரமாணமாய்க் கீதா வசனத்தைக் காண்பிவிக்கிறார்களேயன்றி அத்தியாயங்களிலாகிலும், சுலோகங்களிலாகிலும் வித்தியாசமாய்க் கூறுகிறவர்களொருவருமில்லையே.

கு—நீர் சொல்வது ஸத்யம்தான். ஆனாலும் காலமகிமையால் தற்காலம் மாறுதலான அபிப்பிராயமேற்பட்டுவிட்டது. இது சரியல்லவென்பதற்கு உமக்குப் பிரமாணமிருந்தால் அதை நிரூபணம்செய்யும்.

பா—சொல்லுகிறேன் கேளும்; பாரத கண்டத்திலிருக்கிற கோசங்களில் எங்குப் பார்த்தாலும் என்னால் கூறப்பட்ட இலக்கணத்தோடுகூடிய கீதைதான் இருக்கின்கிறதென்பது இவ்விஷயத்திற்கு முதன்மையான பிரமாணம். பின்னும் ஸ்ரீ பாதராயண மகரிஷியாலியற்றப்பட்ட பாத்மபுராணமும் இவ்விஷயத்திற்குப் பிரமாணமாகின்றது. அதாவது

श्रृणु सुश्रोणि वक्ष्यामि गीतासु स्थितिमात्मनः ।
वक्त्राणि पञ्च जानीहि पञ्चाध्यायाननुक्रमात् ॥
दशाध्यायान् भुजांश्चैकमुदरं द्वौ पदाम्बुजौ ।
एवमष्टादशाध्यायी वाङ्मयी मूर्तिरैश्वरी ॥
जानीहि ज्ञानमात्रेण महापातकनाशिनी ।
अत्राध्यायं तदर्धं वा श्लोकमर्धार्धमेव च ॥

இந்த சுலோகங்களால் 18 அத்தியாயங்களோடு கூடிய கிதா சாஸ்திரந்தான் த்யானம் பண்ணக்கூடிய மூர்த்தியைக் கற்பித்துப் போற்றப்படுகின்றது. அப்புராணத்திலே கீதையிலிருக்கின்றவைகளான 18 அத்தியாயங்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் பாராயணத்தின் பயனும் புகலப்பட்டுள்ளது. மற்றும்

योऽष्टादशजपी नित्यं नरो निश्चलमानसः ।
ज्ञानसिद्धिं स लभते ततो याति परं पदम् ॥

पाठेऽसमर्थः संपूर्णे ततोऽर्धं पाठमाचरेत् ।
तदा गोदानजं पुण्यं लभते नात्र संशयः ॥

त्रिभागं पठमानस्तु गङ्गास्नानफलं लभेत् ।
षडंशं जपमानस्तु सोमयागफलं लभेत् ॥

एकाध्यायन्तु यो नित्यं पठते भक्तिसंयुतः ।
रुद्रलोकमवाप्नोति गणो भूत्वा वसेच्चिरम् ॥

अध्यायं श्लोकपादं वा नित्यं यः पठते नरः ।
स याति नरतां यावन्मन्वन्तरं वसुंधरे ॥

गीतायाः श्लोकदशकं सप्तपञ्चचतुष्टयम् ।
द्वौत्रीनेकं तदर्धं वा श्लोकानां यः पठेन्नरः ॥

चन्द्रलोकमवाप्नोति वर्षाणामयुतं ध्रुवम् ।
गीतापाठसमायुक्तः मृतो मानुषतां व्रजेत् ॥

गीताभ्यासः पुनः कृत्वा लभते मुक्तिमुत्तमाम् ।
गीतेत्युच्चारसंयुक्तो म्रियमाणो गतिं लभेत् ॥

गीतार्थश्रवणासक्तः महापापयुतोऽपि वा ।
वैकुण्ठं समवाप्नोति विष्णुना सह मोदते ॥

வராகபுராணத்தில் பகவானால் கூறப்பட்டுள்ள இவ்வசனங்களாலும் கீதை பதினெட்டு அத்தியாயங்களுடன் கூடியதென்று நன்கு வெளியாகின்றது, அன்றியும்

पार्थाय प्रतिबोधितां भगवता नारायणेन स्वयं
व्यासेन ग्रथितां पुराणमुनिना मध्येमहाभारतम् ।
अद्वैतामृतवर्षिणीं भगवतीमष्टादशाध्यायिनी-
मम्ब त्वामनुसन्दधामि भगवद्गीते भवद्वेषणीम् ॥

என்று வெகுகாலமாய் ஆன்றோர் முகமாய் உபதேசம் பெற்ற ஸகலமான ஆஸ்திக ஜனங்களாலும் தியானிக்கப் படும் இந்தச் சுலோகத்தாலும் 18 அத்தியாயந்தான் கீதாசாஸ்திரத்திற்கென்றே தெரிகின்றது. மேலும்

कर्मोपास्तिस्तथा ज्ञानमिति काण्डत्रयक्रमात् ।
तद्रूपाष्टादशाध्याया गीता काण्डत्रयात्मिका ॥

என்று வியாக்யாதாக்களான பல பண்டிதர்களாலும் அங்கீகரிக்கப்பெற்ற பெரியோர்களின் வசனமும் 18 அத்தியாயந்தான் என்பதற்குப் பிரமாணமாகின்றது. சுலோகங்களின் கணக்கோவெனில் எல்லா பாரத புஸ்தகங்களிலும் 700 தான் இருக்கின்றனவென்று வேறு அபிப்பிராயமின்றி பலரும் அங்கீகரிக்கின்றனர். இக்கருத்தையே ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியரவர்களும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவால் எவ்விதம் உபதேசிக்கப்பட்டதோ அந்த தர்மத்தை ஸர்வக்ஞராயும் பகவானுயுமிருக்கிற ஸ்ரீ வேதவியாஸ மகரிஷியானவர் கீதையென்ற பெயர்கொண்ட எழுநூறு சுலோகங்களினால் நன்கு போதித்திருக்கிறார் என்கிற இந்த அபிப்பிராயத்தை வெளியிடும் கீதாபாஷ்ய கிரந்தத்தால் நிரூபித்திருக்கிறார்கள். பின்னும் கீதா சாஸ்திரத்திற்கு விசேஷமான கருத்தை வெளியிடும் ஸ்ரீ பகவத்பாதாவர்களின் மதத்தை யனுசரிப்பவர்களும் புறமதஸ்தர்களான ஸ்ரீ ராமாநுஜாசார்யர் வேதாந்த தேசிகர் முதலானவர்களும் இந்தச் சுலோகங்களில் முன்பின்னாக இருக்கிறதென்றாவது பாடவித்தியாச மிருக்கென்றாவது விவாதப் படுகிறவர்களாகத் தெரியவில்லை. இவைகளால் சுலோகங்களின் கணக்கும் 700-தான் என்று எல்லோராலுமங்கீக

ரிக்கப்பட்ட, இவ்விஷயத்தில் சரியல்லவென்று மாறுத லாக்குவதற்குக் காரணம் யாதென்று புலப்படவில்லை. மேற் கூறும் பிரமாணத்தாலும் பாடபேதமென்கிற சங் கைக்கு அற்பமேனும் இடமில்லை. இந்த கீதாசாஸ்திரத் தை உபநிஷத்துக்குச் சமானமென்று நம் முன்னோர்க ளான பெரியோர்களால் குருமுகமாகவே அத்தியயனம் பண்ணப்பட்டு வந்தது. தற்காலமும் சிஷ்டாசாரத்தைக் கைவிடக் கூடாதென்று ஆஸ்திகர்களான சில சாதுக்கள் அந்த ஆசாரத்தையே அனுஷடித்து வருகின்றார்கள். இதை உபநிஷத்துக்குச் சமானமாய்ச் சொல்வதற்கு யாது காரணமென்றால் பிரம்ம சூத்திரங்களை இயற்றியவ ரான மகரிஷி வியாசரானவர் எங்ஙனம் ஸூத்திரங்களி லுபநிஷத்துக்களைப் பிரமாணமாக அங்கீகரித்திருக்கின் றாரோ அவ்விதமே இதையும் அங்கீகரித்திருப்பதே இதை உபநிஷத்தென்று கூறுவதற்கு முக்கியமான பிரமாண மாகிறது. இதைக்கொண்டும் எப்படி உபநிஷத்துக்கள் அனாதிகாலமாய்க் குரு பரம்பரையில் பாட பேதம் முத லிய வித்தியாசத்திற்கு அற்பமேனுமிடமில்லாமல் எல்லோ ராலும் ஒரே அபிப்பிராயமாய் அத்தியயனம் பண்ணப் பட்டு வருகின்றனவோ அப்படியே இந்தக் கீதை என்கிற உபநிஷத்தும் 700 சுலோகங்களடங்கிய 18 அத்தியாயாத் மகமாகவே அத்தியயன பரம்பரையில் நடைபெற்று வரு கிறதென்பதும் பிரஸித்தம். இவ்விதப் பிரமாணங்களால் இந்தக் கீதா சாஸ்திரத்தினுடைய அத்தியாயங்களிலோ பாடத்திலோ யாதொரு சங்கைக்கும் அற்பமேனு மவகாச மேயில்லை என்று நீரும் திண்ணமாய் எண்ணும். இப்பொ ழுது உம்மால் அறியப்பட்ட இதற்கு வேறுமையான அபிப்பிராயம் எவ்விதம்? அதைச் சொல்லும். அக்கவி யின் விலாசத்தையும் கேட்போம்.

கு—ஆரம்ப காலத்திலேயே இந்தக் கீதையை கலிவிலாசமென்று தீர்மானித்து விட்டீரே. கேட்ட பிறகு என்ன சொல்லப் போகின்றீரோவென்று சொல்லுவதற்குக்கூட எனக்குப் பயமாயிருக்கிறது.

பா—பயப்படவேண்டாம். பிறரால் கூறப்பட்ட அர்த்தத்தையன்றோ நீர் அனுவாதம் செய்யப் போகிறீர். ஆகையால் சந்தேகப்படாமல் சொல்லும்.

கு—அப்படியானால் கூறுகின்றேன். ஸ்ரீ பகவத்கீதைக்கும் தற்காலம் ஏற்பட்டிருக்கிற கீதைக்கும் விரோதமானது ஓரிடத்தில் மாத்திரமல்ல.

பா—பலவிடங்களில் விரோதமிருக்கிறதென்கிற உமது வார்த்தையினாலேயே எனது ஹிருதயம் நடுங்குகிறது. எந்தெந்த இடங்களில் விரோத மிருக்கின்றதென்பதைக் கூறும்.

கு—முதலில் காண்டங்களில் பிராசீன கீதையில் மூன்று காண்டங்கள். இக்கீதையிலோவெனில் ஞானம், ஸங்கல்பம், கர்மம், யோகம் எனப் பெயர்கொண்ட நான்கு பாதங்கள். ஒவ்வொரு பாதத்திலும் ஆறு காண்டங்கள். இதில் காண்டம் அத்தியாயம் இவ்விரண்டிற்கும் வேற்றுமையில்லை.

பா—அப்படியானால் இது வேறு கீதை யென்பதாகத் தெரிகின்றது.

கு—வேறல்ல, இதுதான் சுத்தமான பகவத்கீதை. உங்களால் சொல்லப்பட்ட கீதையானது அசுத்தமானதென்று சுத்த தர்மமண்டலத்தை யடைந்த ஆரியர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

பா—என்ன ஓய் புதிது புதிதாக வார்த்தைகளை வெளியிடுகின்றவராய்க்கொண்டு என் மனதை மிகவும் நடுங்கச் செய்கின்றீரே. சுத்ததர்மமண்டலமென்று

லென்ன? ஆரியர்களென்றால் யாவர்? அவர்களுடைய சுத்தமான கீதையென்பது யாது? புராணமாயுள்ள பகவத் கீதையானது எங்ஙனம் அசுத்தம்? பாதம் முதலிய பிரிவு ஏற்படுத்தியதற்குப் பிரமாணம் யாது? இவ்வெல்லாவற்றிற்கும் விஸ்தாரமாய் நீர் விடையளியும். உமது வார்த்தைகள் எனக்கு அளவிறந்த சந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றன.

கு—சுத்த தர்மமண்டலமோ வென்றால் சில ஜனங்கள் கூடிய ஓர் கூட்டத்திற்குப் பெயர். அதிலிருக்கும் ஜனங்களே சுத்த ஆர்யர்களெனப்படுகின்றனர். ஹம்ஸர், கோபிலர், நாரதர், சர்படி முதலிய சித்தபுருடர்கள் அவ்வக் காலங்களில் சுத்த ஆரியர்களுக்குள் ஒருவரையடைந்து மிகவும் ரகஸ்யங்களான பல சாஸ்திரார்த்தங்களை உபதேசம் செய்கிறார்கள். அவ்வுபதேசங்களுக்குள் இச்சுத்த கீதையும் ஒன்று. புராணமான பகவத்கீதையானது மகா பாரதத்தைத் தூஷித்தவரான ஜம்புகனென்ற பிராமணனாலேயே தூஷிக்கப்பட்டிருக்கின்றது. பாதாதி விபாகங்கள் காயத்ரீ நான்கு பாதமாயிருப்பதைக்கொண்டு நான்கு பாதங்களாக ஏர்ப்பட்டிருக்கின்றது.

பா—கஷ்டம். காயத்ரீயும் நான்கு பாதங்களையுடையதாக ஆய்விட்டதா?

கு—ஆம். சுத்த ஆரியர்களால் நான்கு பாதத்தையுடையதாகத்தான் கூறப்படுகின்றது.

பா—காயத்ரீயானது நான்கு பாதங்களையுடையதென்றும் வித்தைகளனைவற்றிற்கும் மூலமென்றும் சொல்வதில் பிரமாணமென்ன.

கு—நாரத மகரிஷியால் எழுதப்பட்ட

माता हि सर्वविद्यानां गायत्री च चतुष्पदा ।
प्रणवं पितरं प्राहुर्मुनयो धर्मवत्सलाः ॥

என்கிற இவ்வசனம் பிரமாணமாகிறது.

பா—இவரென்ன புதிதான நாரதரோ ?

கு—உண்மையே சுத்தார்யர்களுக்கு அபிமதரான நார்தர் தான் இவர்.

பா—அப்படியானல் இவ்வசனம் அங்கீகரிக்கத் தக்கதல்ல. எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமன்றோ. பிரமாணமாகக் கூறுவதற்கு யோக்கியமாகும். இந்த வசனமானது பிறர்களால் அங்கீகரிக்கப் படவில்லை யென்பதுமாத்திரமல்ல. சுருதி, ஸ்மிருதிகளின் கருத்திற்கும் விரோதமாயிருக்கின்றது. त्रिपदा गीयत्र என்றல்லவோ பல விடங்களில் கூறப்படுகின்றது

त्रिभ्य एव तु वेदेभ्यः पादं पादमदूदुहत् ।
तदित्यृचोऽस्याः सावित्र्याः परमेष्ठीं प्रजापतिः ॥

என்று மனுஸ்மிருதியிலும் கூறப்படுகின்றது.

ஆனல் காயத்ரீக்கு நான்கு பாதங்களுண்டென்று சாஸ்திரமிருக்கின்றது. அதானது உபாஸகர்களுக்கு ஜபம் முதலிய கர்மாக்களில் உபயோகத்திற்காக ஏற்பட்டது. அதுவும் தந்திர ஸித்தமேயல்லாமல் சுருதிஸித்தமல்ல வென்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

கு—அப்படியானல் நவீன கீதைக்கு அவர்கள் சொல்வது உசிதமாக ஆகலாம்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ ராமவிஜயம்.

அயோத்யா காண்டம்.

ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து இம்மஹோத்ஸவத்தை எல்லோருக்கும் தெரிவிக்கும்படியாகச் சட்டதிட்டங்கள் புரிந்துவிட்டு, பளிங்குபோன்ற மனதுள்ள சக்ரவர்த்தி தனது அன்பிற்கெல்லாம் உறைவிடமான கைகேயியின் அந்தப்புரத்திற்கு வந்தனர். நவரத்ன விதானங்களும் இந்திர நீலத் தளவரிசைகளும் பத்மராகத் தூண்களும் வைடூர்யக் கதவுகளும் உள்ள ஆஸ்தானங்களில் சென்று அவளை அங்கு வழக்கப்படி காணாமல் மன்னவன் தயங்கினார். ஸங்கீத சாலையிலும் சம்மங்கிக் கொடி வீட்டிலும் செய்பொய்கையின் படிக்கட்டுகளிலும் விளையாட்டு மலைகளின் உச்சியிலும் அவளைத் தேடித் தேடிக் கவலை மிகுந்தவரானார். அவள் இல்லாமல் சூன்யமாக அவ்விடங்களை இதற்கு முன் அவர் ஒரு நாளும் பார்த்ததில்லை. அரசன் படும் அவஸ்தையைப் பார்த்து அங்கு நின்ற பிரதீஹாரி "தேவ! சொல்வதற்குப் பயமாயிருக்கிறது. மகாராணி மகாகோபங்கொண்டு மது மயக்கங்கொண்டவர்கள்போல் கோப வீட்டினுள் ஓடப்பார்த்தோம். காரணம் புரியவில்லை" என்றனள். மகாராஜாவுக்கு மகிழ்ச்சியெல்லாம் ஒரு நொடியில் போய்விட்டது. பைத்தியம் பிடித்தவர்போல் தடங்கிய நடையுடன் கோபக்ரஹத்தினுள் புகுந்தார். தனது கண்களின் கருமணியான கைகேயியை பூமியில் படுத்தபடி பார்த்தார். வேர

ற்றுச் சாய்ந்த மல்லிகைக் கொடிபோல், விஷத்தை யுட்கொண்ட பெண் யானைபோல் தரையில் காணப்படும் அந்நாயகியை நடுநடுக்கங் கொண்ட அரசன் கைகளால் வாரி எடுக்க, கைகேயி அக்கைகளை நீக்கி "மீன் துவழ்கின்றது போல் மண்ணில் வீழ்ந்தாள்" ஒன்றும் பேசாது திணறித் திணறிப் பெருமூச்சு விட்டாள். காதல் மிகுந்த மன்னவன் ஒன்றும் தோன்றாதவராய்ச் சற்று திகைத்து நின்று "பிரிய சகி ஏன் இப்படி புழுதியில் படுத்துப் புரளவேண்டும்? உன் திருமேனியை அலங்கரிக்கும் ஆபரணங்கள் அங்குமிங்கும் அலங்கோலமாய்ச் சிதறிக் கிடப்பானேன்? வியாதியா? தகுந்த வைத்தியர்களை இப்பொழுதே வரவழைக்கின்றேன். அல்லது கோபமா? அப்படிக் கோபம் வரும்படிச் செய்தத் துஷ்டன் யார்? இப்பொழுதே அவனைச் செக்கிலிட்டு ஆட்டி விடுகிறேன். உன்னைச் சேர்ந்தவர்கள் யாருக்காவது வேண்டுமானால் கனகாபிஷேகம் செய்கின்றேன். எந்த தரித்திரனை ஈச்வரனாக்க வேண்டும். எந்தப் பணக்காரன் இந்த க்ஷணமே ஏழையாகவேண்டும்? சொல்லலாம். நானும் என்னைச் சேர்ந்தவர்களும் உனக்கு வசமானவர்களே. பிராணனை வேண்டுமானாலும் தருகின்றேன்" என்று மதுரமாய்க் கேட்டார். கைகேயி தன்னிடம் அவர் வைத்திருக்கும் காதற் கடல்கரையில்லாததென்று கண்டு கொண்டவளாய் "எனக்கு ஒருவரும் விரோதம் செய்யவில்லை. என்னை ஒருவரும் வஞ்சிக்கவும் இல்லை. ஏதோ ஒரு சபலம் கொண்டேன். ஒரு சின்னஞ் சிறிதான ஆசை. அதை நிச்சயமாய் தருகிறேன் என்று சொல்லவேண்டும். செய்வதானால் சொல்லுகிறேன்" என்று யாழினும் இனிய குரலுடன் வசனித்தாள். மஹீபதி மந்தஹாசத்துடன் முகம் நிமிர்ந்து நின்ற மானினியை ஆசையாய்ப் பார்த்து கூந்த

லைக் கோதிக் கொடுத்து "அடி காவக்காரி! இவ்வளவு தானே! இதற்காகவோ இவ்வளவு ஆர்ப்பாட்டம். எனக்கு ஸ்ரீராமனைக் காட்டிலும் அன்பிற்கும் ஆனந்தத்திற்கும் ஆஸ்பதமான வஸ்துவே இல்லை என்றறிவாய். தனி வீரனாய் மங்களாகாரனாய் விளங்கும் என் ஜீவாதாரனான அம்மன்னன் பெயரால் சொல்கின்றேன். நீ கேட்டதைத் தருகிறேன். யோசிக்காமல் கேட்கலாம்" என்று உரைத்தார். தன்னிஷ்டத்திற்குப் பொருந்தியதான வார்த்தை அரசன் வாக்கினால் வந்ததென்று அகமகிழ்ச்சிகொண்ட கைகேயி, "இந்திராதி தேவதைகளே! ஆகாசவாணியே! பூமா தேவியே! நீங்களெல்லாரும் சாக்ஷியாயிருங்கள். சத்யசந்தனான மகாராஜனிடம் வரன்கள் கேட்கின்றேன். கேட்டதைத் தருகின்றேனென்று நீங்களெல்லோரும் அறிய அவர் வாக்குக் கொடுத்திருக்கின்றார். எதைக் கைவிட்டாலும் இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த ராஜாக்கள் ஸத்தியத்தைக் கனவிலும் கைவிடமாட்டார்கள். மகாராஜா! தேவாசுர யுத்தத்தில் நான் ஏதோ தங்களைக் காப்பாற்றிய சமயத்தில்—நாதா, ஞாபகமிருக்கின்றதா? இரண்டு வரன்கள் தந்தீர்களே? அவைகளை இதுவரையில் மறதியினால் நான் கேட்காமலிருந்து விட்டதினால் தங்களைக் கடன்காரர்களாகச் செய்த பாதகியாயிருக்கின்றேன். நல்ல வேளையாய் அவைகளை இப்பொழுது கேட்டு வாங்கிக்கொண்டு தங்களை ரணத்தினின்று விடுவிக்கும்படியான பாக்யத்தைப் பெறப் போகின்றேன். பிராண வல்லப! ஒன்றும் அதிகமில்லை. இப்பொழுது என் செல்வன் ராமனுக்கேற்பட்ட அபிஷேகம் குழந்தை பரதனுக்கு ஆகவேண்டும். ஸ்ரீராமன் கொஞ்ச காலம் வனம் புகுதல் வேண்டும்; ஒரு ஆறு வருஷம், ஒரு ஐந்து வருஷம், ஒரு இரண்டு வருஷம், பிந்தி ஒரு வருஷம், இவ்வ

ளவுதான். வனவாச தர்மத்தை அனுசரித்து ஜடாதாரியாய் தண்டகாரண்யத்தில் செல்லுதல் வேண்டும். இது தான் என் பிரார்த்தனை. நீங்கள் என்ன இல்லையென்றோ சொல்லப் போகின்றீர்கள், தந்தது தந்ததுதான். நான் வாங்கினது வாங்கினது தான். என்ன சொல்லுகிறீர்கள்! சரிதானா?" என்றாள்.

கனவிலும் நினைக்காதபடி இவள் கேட்ட கொடிய வரன்கள் மகாராஜாவுக்கு மஹத்தான திகிலை யூட்டி, வேரற்ற மரம்போல் அவஸர பூமியில் விழச்செய்தன.

"பூதல முற்றதனிற் புரண்ட மன்னன்
மாதுய்ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனைமுற்றிட வெந்துவெந்து கொல்லன்
ஊதுலையிற் கனலென்ன வெய்துயிர்த்தார்"

வெகு நேரம் கழித்துக் கண் திறந்தார் தராதிபதி தடைகட்டிய ஸர்ப்பம்போல் திணறி "அடி கைகேயி! இவ்வளவு கொடியவளானீ? "என் மகன், என் கண், என் உயிர், எல்லா வுயிர்கட்கும் நன்மகன்" ஆன என் ராமன் உனக்கென்ன தீங்கிழைத்தானடி? சாதுவான என் சுந்தரனிடத்தில் இவ்வளவு கொடுமை உனக்கேதற்கடி? நீ க்ஷேமப்படுவாயா? உலகமனைத்தையும் இன்பமயமாய் நிறைக்கும் என் மனோகரனை எப்படிப் பிரியமுடியுமடி? நான் சகலத்தையும் துறப்பேன்; என் ஆவியையும் இழப்பேன்; ராமனை விடேன். சூர்யனின்றி உலகம் நிலைநிற்கலாம், ஜலம் விடாமல் பயிர் செழிக்கலாம், என் ராமனில்லாமல் நான் க்ஷணமேனும் ஜீவிக்கமாட்டேன். உன் கால்களை பிடிக்கின்றேன். இக்கொடிய எண்ணத்தை விட்டுவிடு. வீணாய் பழிக்காளாகாதே! ஆ! என்ன அநியாயமடி! அம்புஜலோசனனை என் அழகனுக்கோ வனவாசம்! ஆச்ரிதவத்ஸலமான என் ஆருயிர்க்கோ

வனவாசம்! கமனீய காத்ரனான என் கண்மணிக்கோ வனவாசம்! தமால நீலனான என் தருணனுக்கோ வனவாசம்! காருண்ய சமுத்திரனான என் காந்தனுக்கோ வனவாசம்! நயனங்களின் உத்ஸவமான என் நாதனுக்கோ வனவாசம்! மதுரமதுரமாய்ப்பேசும் என் மன்னனுக்கோ வனவாசம்! சுகுமார ரூபனான என் சுந்தரனுக்கோ வனவாசம்! ரஸிகஜன பாக்யமான என் ராமனுக்கோ வனவாசம்! ஆ! மெல்லிய மலரணையில் துயிலும் என் மன்மதன் காடு முரடான காடுகளில் எப்படி நித்திரை புரிவான்? அறுசுவையுடன் கூடிய அமுதை யுட்கொள்ளும் என் அன்பன் கந்தமூலங்களை எவ்விதம் புசிப்பான்? மெத்தவும் மிருதுவான நறுமலர் சொரிந்த அர்ண்மனை வழிகளில் நடக்கும் என் மைந்தன் கல்லிலும் முள்ளிலும் எப்படி நடப்பான்? இராவும் பகலும் எண்ணற்கரிய அரசிளங் குமரர்களால் சேவிக்கப்படும் என் செல்வன் கரடிகளும் புலிகளும் சீறிவரும் காந்தாரங்களில் சஞ்சரிக்க நேருமே. கண்ணே! நீ வனம்போக வேண்டுமடா" என்று அரை வாயால் சொல்லு முன் கொஞ்சமும் ஆலோசியாமல் "இதோ புறப்பட்டு விட்டேன், செலவு தாருங்கள்" என்று சொல்லகூடிய என் கல்யாண புருஷனை இப்படி ஹிம்ஸிப்பதற்கு கன்னெஞ்சனும் துணியானே. பரதன் ராஜ்யம் ஆளட்டும். ஆக்ஷேபமில்லை. ராமன் வனம் போகவேண்டுமென்று நிர்ப்பந்தம் எதற்கடி? அவன் நகரத்திலேயே இருந்தால் என்ன மோசமடி? பிக்ஷாடனம் செய்துகொண்டாவது என் கண்முன் அவன் விளங்கக் கூடாதா? அடி பாபி! ரத்னமென்று உன்னைத் தேடிக் கொணர்ந்தேன் ஜ்வலிக்கும் செந்தணல் ஆனையடி? வாஸிக்கும் புஷ்பமாலை யென்று உன்னைக் கைப்பிடித்தேன். விஷம் வீசும் காளசர்ப்பமாய்மாறி என்னைப்

பிடிக்கின்றாயடி. அவளும் தாமரைக்கொடி என்றுன் னைத் தொட்டேன் துன்பமே தரும் தூமகேதுவாய்த் தோன்றினாயடி! ஏது! ஏது! என்னை நீ இனிக் காண மாட்டாய். அடி காதகி! எனக்கு நீ இனிப் பத்னியு மில்லை. உனக்கு நான் இனிப் பதியுமில்லை. உன்னை அனு சரித்ததால் உன் பிள்ளையும் என் பிள்ளையாக வேண்டாம். என் பிரிய ஸகி கௌஸல்யே எங்கிருக்கின்றாயடி? என் கண்கள் இருண்டு விட்டன; மனமோ பதைக்கின்றது; அங்கங்களெல்லாம் ஆட்டங்கொண்டு விட்டன" என்று இப்படியெல்லாம் சொல்லி அடிபெயர்ந்து விழுந்த மகா பர்வதம்போல் மஹாராஜன் மூர்ச்சித்து பூமியில்

"வீழ்ந்தான் வீழாவெந்துய
ரத்தின் கடல் வெள்ளத்
தாழ்ந்தான் ஆழாவக்கடலுக்
கோர் கரை காணான்"

கைகேயியோ சிறிதும் கலங்கினள் இல்லை. கொடு மையோ பெண்ணுருக் கொண்டதுபோல் மகாராஜனைக் கோணல் பார்வையாய்ப் பார்த்தாள். "எல்லாம் சரி தான். இதற்கெல்லாம் இடங்கொடேன். ராமனுக்குப் பட்டாபிஷேகமானதும் ஆபாலகோபாலமான உலகமெல் லாம் கௌஸல்யயை நமஸ்கரித்து மகாராஜாவின் மாதா வென்று அஞ்சலி செய்து நிற்குமே. வெகு செருக்கு டன் அவ்வஞ்சலிகளை ஏற்றுக்கொண்டு கொட்டமடிப் பளே அவள். அதைப் பார்ப்பதைவிட நான் இல்லா மலே இருந்துவிடலாமே. கைகேயிக்கு வரன்களை தந்து விட்டு, இல்லையென்று செய்துவிடப் பார்க்கிறீர்கள். அது பலியாது" என்றிவ்வாறெல்லாம் பேசிப் படபடத் தாள். ஸத்யபாசத்தால் கட்டுண்ட மகாராஜன் இவளது நெஞ்சிரக்கமில்லா தன்மையையும் தான் யோஜியாமல்

அவ்விடம்வந்து அனர்த்தத்தை அடைந்ததையும் நினைத்து நினைத்து நெஞ்சம் புண்ணாகி, விஷத்தை ஏராளமாய் உண்ட மதயானையைபோல் வர்ணிக்க முடியாத வேதனையில் உழன்று வாடினார். கைகேயி ஏதோ ஸத்யத்தைத் துறந்தாலும், ராமனை விடார்போலிருக்கின்றதே என்று கிலிப்பிடித்தவளாய் ஸ்ரீராமன் வரவை எதிர் பார்த்தாள். அந்தப்புரத்தில் இப்படி யெல்லாம் விபரீதமாய் நடப்பதை அறியாமல் மஹா ஜனங்களெல்லோரும் "இன்றைக்கு ஸ்ரீராமனுக்கு அபிஷேகம். இன்றைக்கு ஸ்ரீ ரகுநாதனுக்கு மஹோற்சவம்" என்று குதூகலமாய் சொல்லிக்கொண்டு மங்கள வாத்யங்கள் முழங்க லக்ஷ்மீகரமாய் நகரமுழுவதும் அலங்கரித்தார்கள்.

ப. கி. கல்யாணராமசாஸ்த்ரி.

கர்மம்.

(முன்தொடர்ச்சி.)

முதலில் ஞான சாஸ்திரங்களிற் கர்மம் பந்த ஹேதுவென்கின்றதே யென்றனர். இது உண்மை ஆனால் அது விடத் தக்கதல்ல. கர்மத்திற்கும் ஞானத்திற்கும் இருளுக்கும் ஒளிக்குமுள்ள நேசமென்பது மெய். ஆனால் கர்மம் யாருக்கென்பதை நன்கு தெரிந்துகொண்டால் இந்த வாசங்கையே நிகழ இடமிராது. கர்மமென்பது அனாதியாய் மனுஷ்ய ஸாமான்யத்தையே பொருந்தி நிற்கும் அது நித்தியமென்றே கூறிவிடலாம். அது ஞான சாஸ்திரமென்றும் கட்டடத்தின் முதற் படிகட்டு அதில் ஏறாமல் எவனும் ஸித்திபெற முடியாதென்பதே

நமது சாஸ்திரங்களின் முக்கியமான கொள்கை. கர்ம வாஸனையானது திடப்பட்டு மனதில் ஏறி அதன் மூலம் பல ஜன்மங்களில் சித்தசுத்தி பெற்று ஒவ்வொரு ஜந்மத்தி லும் கொஞ்சம் கொஞ்சமாய் வைராக்யம் தடித்துப் பிறகு கடைசியில் முக்தி பெறலாம். இவ்வபிப்பிராயத் தையே பகவான் கீதையிலும் बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते அநேக ஜன்மங்களெடுத்துக் கடைசியில் ஞானியாகிப் பிறகு என்னை அடைவான் என்றார். ஆகவே கன்மம் சித்த சுத்திக்கென்பது உண்மை. ஆதல் பற்றியே चित्तस्य शुद्धये कर्म न तु वस्तूपलब्धये கன்மாவானது சித்தசுத்திக்கே தவிற வஸ்து வை அறிவதற் கில்லையென்றார். இவ்வபிப்பிராயத்தை மனதில் திடமாய் இறுத்திக்கொண்டு பகவான்

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥
यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥
उत्सीदेयुरिमेलोका न कुर्यां चेदहं
सङ्करस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ॥

ஓ அர்ஜுனா? இம்மூன்று சுலோகங்களிலும் எனக்கு செய்யவேண்டியது ஒன்றுமில்லை. என்னாலடையப்படா ததும் ஒன்றுமில்லை. ஆனாலும் நான் கன்மத்தைச் செய் துகொண்டிருக்கிறேன். அவ்விதம் நான் செய்யாமலிருந் துவிட்டால் என்னைப்பார்த்து லோகமும் அப்படியே நட த்தும். அதன் மூலமாய் ஸங்கர ஜாதியேற்பட்டுவிடும். அதற்கு மூலகாரணம் நானாவேன் என்று சொல்லியபிறகு இக்காரணம் கொண்டு நீயும் உனது ஜாதிக்கேற்ப கன் மாவை செய்யக்கடவாய் என்று வற்புறுத்திக்கூறுகின் றனர் இவ்விதம் திடமாய்க்கூறும் பகவானா எல்லா கன்மத் தையும் விட்டுவிடலாமென்றும் கூறுவர் அப்படி யவர்

கூறமாட்டாராதல்பற்றி सर्वधर्मान्परित्यज्य என்பதற்கு உண்மையான அர்த்தத்தை கவனிக்கவேண்டியதுண்டு. இதனல் நமக்குக் கிடைக்கும் ஸித்தாந்தம் யாதெனில் ஞான சாஸ்திரங்களில் கூறப்படும் பூரண ஆத்மஞானம் பெறுமளவும் கன்மம் நம்மை விடாது. ஞானம் பூரணமாய் நிலைபெற்றுவிட்டால் கன்மம் நம்மிடம் நிற்காது. விளக்கை நாம் ஏற்றுமளவும் இருள் வீட்டைவிட்டு அகலாது. விளக்கேற்றப் பட்டபின் இருள் அங்கு நிற்காது. இவ்வளவுதான் இங்குமுள்ள பேதம். ஆகவே கன்மத்தை நாம் விட பாத்தியப் பட்டவர்களல்ல. ஞானம் வரும்போது அதுவே நழுவும். ஆதல்பற்றியே कर्माण्यस्य विलीयन्ते सुप्तहस्तस्थ पुष्पवत् தூங்குகிறவன் கையிலிருக்கும் புஷ்பம் கைவிட்டு நழுவுவதுபோல் இந்த ஞானியினுடைய கன்மாவும் அவனை விட்டொழியுமென்றார். இதனல் ஏற்படும் உண்மை யென்னவென்பதை இன்னும் கவனியுங்கள். தூங்குகிறவனுக்கு உபமேயமாய் ஞானி யேற்பட்டான். தூங்கிறவன் விழித்துக்கொண்டிருக்கும் காலத்தில் தனது கிருகம் தன மனைவி, தன் பொருள், தன் பசு, தன் தோட்டம் என்று பலவிதத்திலும் தனனுடையது என்ற புத்தியைப் பலமாய் ஊன்றி வியவகரிக்கிறன். அதற்கேதாவது கெடுதி ஒரு சமயம் நேரிடின் அதைத் தனக்கு வந்ததாகவே அனுபவித்துத் துக்கம் பாராட்டுகிறன். இது நம்மெல்லோருக்கும் ஸகஜம். இப்படிப்பட்ட நாம் ஸுஷுப்தியென்ற தூக்கத்தை நன்கடைந்துவிட்டால் நம்முடையது என்று பூரணுபிமானம் வைத்திருந்த எதைக் கொள்ளை கொண்டாலும சரி. பரமானந்த பூரணனாய் ஒன்றுமறியாதவனாய் பரமஸுகியாய் நித்திராஸுகமனுபவிக்கின்ற அவன் ஒருவித விகாரத்தையும் அப்போது காட்டுகிறனில்லை. என் முற்கூறியவைகளெல்லால் பௌதிகமான

தேகத்தை யொட்டிவந்தது. அத்தகைய தேகத்தையே அக்காலத்தில் அவன் மறந்திருக்கும்போது அதையொட்டிவந்த மற்றவைகளின் கதியை விசாரிப்பானேன்.

(இன்னும் வரும்.)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

பக்தி.

(முன்தொடர்ச்சி.)

1. இராஜபக்தி नाविष्णुः पृथिवीपतिः என்ற வேதவாக்கியத்தின்படி அரசன், பரிபாலன கர்த்தாவான கமலாபதியினம்சம் பெற்றுலகைப் பரிபாலனஞ் செய்கிறானென்றும் "अष्टाभिर्लोकपालानां मात्राभिर्निर्मितो नृपः" என்ற தற்குறியதாய் நின்று, அஷ்ட திக்பாலகர்களின், பாகங்களால் ஒருருவாயமையப் பெற்றுளாரென்பதும் உலகிற் கின்றியமையாத நன்மைகளைச் செய்வதாலேயே நம்மனோர்க்குத் தெளியலாகுமென்பது திண்ணம். ஆதலின் தெய்வத்தன்மை சிறந்தும் பெற்றுளானென்பதும் பிறவும் வித்தமாம். இங்கிலாந்திலுள்ள நமது, மாக்ஷிமைதங்கிய விந்திய சக்ரவர்த்திக்குப் பிரதிநிதியாக, இங்கு, வைஸராய், அரசாக்ஷி புரிவதுபோல், எவ்வுலகிற்கு மிறையவனாயிருந்தொளிரும் ஸர்வேச்வரனுக்குப் பிரதிநிதியாய் இவ்வுலகில் அரசர்களீசனாணைக்குப் பயந்து நெறிமுறையினின்று நீங்காது, அரசாக்ஷி புரிவது, வரையவும் வேண்டுமோ! நம்மவரறியாத விஷயமோ!! கூர்ந்து நோக்குங்கால், இலகுவாய்ப் புலனாகும்.

2. இனி அரசரென்பவர் யாவர்? குடிகள் என்பவர் யாவர்? மேற்கூறிய விருவற்குமுள்ள சம்பந்தமென்னை? அரசனுடைய கடமைகள் யாவை? குடிகளின் கடமைகள்

யாவை? ஆளுகையின் பெருமையும் வருத்தமுமென்னை? அரசனிடமன்பு பாராட்டவேண்டுவதேன்? அவ்வன்பு மெத்தகைபதா யிருத்தல் வேண்டும்? என்றிவைக்ளைச் சற்றே விசாரித்து மேற் செல்வேன்.

3. அரசரென்பவர் யாவர்?

'यथा प्रह्लादनाच्चन्द्रः प्रतापात्तपनो यथा ।
तथैव बाहुमन्वर्थो राजा प्रकृतिरञ्जनात् ॥

என்று காளிதாஸன் இரகுவம்சம் நாலாவது ஸர்க்கத்தில் கூறியிருப்பதே யிதற்குத்தக்கதோர்சான்றும். चदि आह्लादे என்ற தாதுவின் பேரில் चन्द्रः என்று பிறந்தபதம். உலகி லுள்ள யாவரையும், சந்தோஷப்படுத்தி வைப்பதால் சந்தி ரனென்று காரணப்பெயராய் எவ்விதமமைந்ததோ, तप தாதுவின் பேரில் 'तपनः' என்று உலகைத் தபிக்கச்செய்வ தால் தபனனென்றுகாரணப்பெயராய் எவ்விதமமைந்ததோ அவ்விதமே 'रञ्ज' தாதுவினின்றுண்டான ராஜாவென்ற பதமும் குடிகளை ரஞ்சனஞ்செய்வதாலேயே காரணப் பெயராய் விளங்குகிறதென்பது நன்கு விளங்கும். மேலு ம். தனது பிரஜைகளை நல்லொழுக்கம் புகட்டியும், அவர்களை யாபத்தினின்றுதற்காத்தும், அன்னபானுகிய வனைத்தும் நல்கிநயமுறப்போஷித்தும் வருப்பவனே யரச னென்னும் பெரியார் கூற்றுமிங்குண்டு

'प्रजानां विनयाधानाद्रक्षणाद्भरणादपि ।
सपिता पितरस्तासां केवलं जन्महेतवः ॥

தந்தையர்கள் சரீரோத்பத்திக்கு மாத்திரம் காரணமாகவிரு க்கின்றார்களே யின்றி மற்றெவ்வாற்றானும் தந்தை யரச னென்பதற்குச் சிறிதுமையமில்லை ஆகவே. யரசன் என்ப வன் மனுநீதிமுறையினின்று ஜனங்களை பாலனஞ் செய்ப வனே யாவன் என்பது வெளியாம்.

4. குடிகளென்பவர் யாவர். மேற்கூறிய லக்ஷணத்தோடு கூடிய் வரசருக்குக் கீழ்ப்படிந்து நடந்து அன்னவரிட மன்பு செலுத்தி வருபவரே நற்குடிகள் என்ற பெற்றியைப்பெற்று நலம் பெறுபவரே குடிகள்.

5. மேற்கூறிய இருவற்குமுள்ள சம்பந்தமென்னே. 'उपजीव्य उपजीवकभावसंबन्धः' அதாவது அரசனைக்குடிகளாச்ரயித்து பிழைப்பதும், அன்னவனிவர்களைக்காப்பதுமாகும்.

6. அரசனது கட்டமைகள் யாவை? குடிகளின் கடமைகள் யாவை? இதனை இராமயணத்தில் வால்மீகி மிக வருமையாகக் கூறுகிறார்:—

त्वं राजा भरत भवस्वयं नराणां वन्यानमहमपि राजराण्मृगाणां
गच्छत्वं पुरवरमध्य संप्रहृष्टः संहृष्टसत्वहमपि दण्डकान्प्रवेक्ष्ये।
शत्रुघ्नः कुशलमतिस्तु ते सहायः सौमित्रिर्मम विदितः प्रदानमित्रं
श्चत्वारस्तनयवरावयं नरेन्द्रं सत्यस्थं भरतचराम माविषादम्॥

பரதன் மாதுல கிருஹத்தினின்று தன் பட்டணம் வந்து சேர்ந்தவுடன் தந்தை விருத்தாந்தம் யாவுமறிந்தும், தனதருமைச் சஹோதரன் செய்தியாவுமறிந்தும் மிகவுமனைந்தவனுய்த் தந்தைக்குச் செய்யவேண்டிய கிவாபாஞ்சலி யாவையுமினிது முடித்துவிட்டு, எவ்விதத்திலும் சகல குணபிராமன் ஸ்ரீராமனை நிர்ப்பந்தஞ் செய்தாவதழைத்து வரவுன்னி, தனது தம்பியோடுஞ் சகல ராஜாங்கங்களோடும் சித்ரகூடம் வந்துசேர்ந்து, இராமனைக் கண்ணாரக் கண்டு மெய்யாரப் படிந்து, எனதருமை யண்ணு, செங்கமலக்கண்ணு, கார்நிறத்தண்ணல், என்று வாயாரமொழிந்து, கையார விறுகத்தழுவிப் பெரியீர் நீவிரிருக்கத் தமியேன் முடிசூட மாட்டுவேனே? நீதிமுறைதானே? அல்லது வழ்வலியிதானே? தாங்களிதுதருணமே தம் நகரெய்தி முடிசூடவும் நாங்கள் பாதாரவிந்தஸேவை பணியவும் நெறிமுறையேயன்றி இவ்விதந்தாஞ் செய்வதடாது,

எனப் புகலவும், செந்தாமரைபோன்ற விழியுடையாள் மெய்பூத்துத் தம்பியை யிறுகத்தழுவி, கண்ணீராலுச்சி நனைத்து கூறுவராயினர். 'அருமையும் அன்பும் நிறைந்த தம்பியே, நினதுள்ளக் கருத்தையாவுமியாமறிந்தோம். ஆயினும், அரசனாகிய நம் தந்தைக்கும், அன்னவன் குடிக்கொப்பான நமக்குமுள்ள சம்பந்தஞ் சிறிதாராய்ந்தால் நமக்கே தெற்றென விளங்கும், அரசனடிபணிந்து அன்னவனையண்டி உயிர்த்திருக்கும் நாம் அவரதாணைப்படி நடத்தல் முறையென்று நீயறியாததோ? ஆதலின் முன் காலம், நமதன்னைக்குதவியவரமிரண்டின்படி உனக்குப் பட்டமும் எனக்கு வனவாஸமும் இறைவனது கட்டளை. அதன்படி யிருவரும் முறைப்படி தலையாற்றாங்கி பணி செலுத்துவதும், அன்னாரை ஸத்யஸந்தன் என்ற புகழை யடைவிப்பதும் நமக்கு மேன்மையேயலாது வேறொன்றில்லை. உனக்கு இட்ட கட்டளைப்படி நடக்கவேண்டும். நகரஞ்சென்று அரசாட்சிக்குரிய வியல்பு சிறிதுங்குறையாது பிரஜைகளை யநுரஞ்சனஞ் செய்துவா. நானும் வனஞ்சென்று துஷ்டரை வேறறுத்து வனவாஸஞ் செய்கிறேன் என்று செப்பியதைக் கவனிக்க அவ்விரண்டும் விளங்காமற் போகுமோ.

7 அரசனது கடைமைகள், குடிகளின் கடமைகள்.

दमः शमः क्षमाधार्मो धृतिः सत्यं पराक्रमः ।
पार्थिवानां गुणाराजन् दण्डश्चाप्यपराधिषु ।

இராம பாணத்தால் அடிபட்ட வாலி இராமனைப் பார்த்து 'அரசனுடைய கடமை யிதுதானோ! உட்புலன், வெப்புலனிவைகளினடக்கமும், ஊக்கமும், உண்மையுரைப்பதும் சத்ருக்களை வதைக்கும் வலிமையும் குற்றவாளியிடம் தண்டனையும், இவை முதலிய நற்குணங்கள் பொருந்தியிருத்தலே அரசனது கடமையென்று பெரியார் வாயிலாகக்

கேள்விப்பட்டுள்ளேன். மேற்கூறியவிவைகளுள் ஒன்றை யேனுமுன்னிடம் காணேம். நுங்குலத்து முதல்வனுகிய மனுகூறிய் நெறியுமிதுதானே!

அரக்கரோ ரழிவு செய்துகழிவ ரேலதற்குவேறேர்
குரக்கினத்தரசைக் கொல்லமனு நெறிகூறிற்றுண்டோ
விரக்கமெங்குகுத்தாய் என்பாலெப்பிழை கண்டாய்யப்பா!
புரக்கழிவிது நீபூண்டால் புகழையார் பரிக்கற் பாலார்.

(கம்பராமயணம் வாலிவதையும்.)

யார்தாமோரரக்கன் உனக்கோர் தீங்கிழைத்து மறைந்தானுயின். அதன் பரிகாரமாக வொரு குரங்கினத் தலைவனைக் கொன்றுவிடு என்று மனுநீதி கூறியுள்ளது? உன்னைக் கருணையங் கடலென்கிருர்களே. அக்கடலினேர் திவலையையுங் காணேனே அதனை யெங்கு ஒளித்தாய்? குற்ற வாளியிட கருணைபுரிவ தெங்கனமெனில், என்னிட மெத்தகைய குற்றமிழைத்ததைக் கண்டனை? இவ்வாறு பாலனத் தொழிலிற்கே யிழிவு புரிந்தாலிதனுல் உண்டாகும் கருப்புகழைத் தாங்க யாவரால் முடியும். நீதிமுறையறிந்த நீ எங்களிருவருக்குமுண்டான வியவகாரத்தை இருவர் மூலமும் விசாரியாமல் ஒரு பக்கமாய்ச் சேர்ந்து, ஒருவர்க் குதவல் நீதியோ?

இருமை நோக்கி நின்றியாவர்க்கு மொக்கின்ற
வருமையாற்றலன்றே வறங்காக்கின்ற
பெருமை யென்பதிதென் பிழைபேணல்விட்
டொருமை நோக்கி யொருவர்க் கொதவலோ?

(கம்பராமாயணம்.)

இருதிறத்தாரது வாக்கு மூலங்களை நன்ருய் நோக்கித் தர்மஸபையார் யாவரும் ஒப்புகின்ற தீர்மானமல்லவோ அறங்காக்கின்ற பெருமையென்பது, குற்றம் விசாரியாமல் ஒருவனைக் கொலைபுரிவது தக்க நீதியோ. (மற்றுமோர்

பொருள்) தீர்மானஞ் செய்பவன், இருமை நோக்கவேண்டும் அதாவது கெடுதலான காரியம் செய்திடின் மேலுலக மிடங்தருகாதிருக்கவெனப் பயந்தும் இங்கும் நீங்காப்பழி பிறந்துலகம் பழிக்குமென நொந்தும் நடுநிலைமையான தீர்மானஞ் செய்தால் நன்மை பயக்குமென்றறிதல் நீதியா? அல்லது மேற்கூறிய வொன்றையும் மனதில் நினையாமல் நீ செய்தது நீதியா? வென தனக்குள்ளாகவே யாலோசித்தால் அறிஞனை வுனக்கு விளங்காததுண்டோவென்று மொழிக்கு, உத்தரங் கூறமிடத்து,

इक्ष्वाकूणामियं भूमिः सशैलवनकानना ।
मृगपक्षिमनुष्याणां निग्रहप्रग्रहावपि ॥

तां पालयति धर्मात्मा भरतः सत्यवागृजुः ।
धर्मकामार्थतत्त्वज्ञो निग्रहानुग्रहे रतः ॥

नयश्च विनयश्चोभौ यस्मिन्सत्यं च सुस्थितम् ॥
विक्रमश्च यथा दृष्टः स राजा देशकालवित् ।

तस्य धर्मकृतादेशा वयमन्ये च पार्थिवाः ॥
चरामो वसुधां कृत्स्नां धर्मसंतानमिच्छवः ।

तस्मिन्नृपतिशार्दूले भरते धर्मवत्सले ।
पालयत्यखिलां भूमिं कश्चरेद्धर्मनिग्रहम् ॥

ते वयं धर्मविभ्रष्टं धर्मे च परमे स्थिताः ।
भरताज्ञां पुरस्कृत्य निगृह्णीमो यथा विधि ॥

राजभिर्धृतदण्डास्तु कृत्वा पापानि मानवाः ।
निर्मलाः स्वर्गमायान्ति सन्तः सुकृतिनो यथा ॥

शासनाद्वा विमोक्षाद्वा स्तेनः स्तेयाद्विमुच्यते ।
राजा त्वशासत्पापस्य तदवाप्नोति किल्बिषम् ॥

இப்பூவுலகம் முழுமையும் இக்ஷ்வாகு வம்சத்தரசர்களின் வசத்திலுள்ளது, தற்காலம் பரதனென்ற திருநாமம்பூண்ட

சக்ரவர்த்தி பரிபாலநஞ் செய்கிறார். அரசியற்குறிய சகல லக்ஷணங்களும் பொருந்தி, முக்கியமான, அங்கவியல், ஒழிபியல் அறனியல், எனும் மூன்றையுங்கொண்டு, உலகிற்கெந்நாளு முதவிவருகிறார். அவற்றுள் அங்கவியலாவது இராஜ்யங்கட்குறிய ஸோநிவேசங்களை யாங்காங்கு சத்துருக்கள் வந்து நுழையாதவாறு நியமனஞ் செய்து பாங்காய்ப் பாதுகாத்துவருவது, (ஒழிபியலாவது) தனது அரசாக்ஷிக்குள்ளிருக்கு மியாவர்க்கு நல்லொழுக்கத்தை நல்கி, நாடு நயமுறச் செய்வது (அறனியலாவது) பொது நன்மையாகவுள்ள காரியங்களான குளம் வெட்டுதல், கோவில் கட்டுதல், பாதை சீர்படுத்துதலிது முதலிய தர்ம காரியங்களைச் செய்வது, ஆகிய நற்குணங்கள் அமைந்த அம்மஹாநுபாவன் செங்கோல் செலுத்து நாளில் நாம் முதலிய் அநேகமரசர்கள் அன்னவராணையைச் சிரமேற்கொண்டு ஆங்காங்குலாவி, தீயரை வதைத்து நல்லோரைக் காத்து நலம் விளைப்பதே யெங்கள் கடமை. யாதலின் நீ இப்பொழுது காமதாபங்கொண்டு தம்பியின் பாரியையின் மேற் காதல்கொண்டு, அவளைக் கைப்பற்றியதுமல்லாமல் தீனனான தம்பியையும் அடித்துத் துறத்தியதால் உன்னைக் கொல்லவேண்டியதவசியமே. அவ்வாறு கொன்றதாலுனக்கும் பாபம் நீங்கி மேலுலகில் நலம் பெறுவாய். அவ்வாறுன்னைத் தண்டியாவிடில் நானுமிராஜாக்ஞை தவிர்த்தவனாவேன் அதனால் எனக்கும் பாபமுண்டு, பாபத்தை நீக்குவதற்காகவே உன்னை வதை புரிந்தேனே யொழிய வேறில்லை. என்ற இவ்வுதாஹரணத்தாலேயே அரசனிருக்கவேண்டிய முறையும் அவன் கீழ்ப்படிந்துள்ள பிரஜைகளின் கடமையும் வெளிப்படையன்றோ. அரசர்கள் நம்மிடம் வாங்குமாறிலொருபங்கு கடமையும் அவர்கள் நமக்குதவிவரும் காரியங்கட்குப் போதுமான செல்வமாகுமோ

போதாதாதலின் மனோவாக்கியங்களால் என்னளும் அன்பு பாராட்டவேண்டியதவசியமாகிறது.

8. ஆளுகையின் பெருமையும் வருத்தமும்,

உலகம் யாவையும், ஒரு குடையில் அரசாக்ஷி புரிவதும், அனேகஞ் சிற்றரசர்கள், இரத்தினவகைகளைத் திரளாக வைத்து பாதாரவிந்தங்களில் சிரம்படப் பணியவும் வந்திகள் பாடவும், கவரி வீசவும், அரம்பையராடவும் ஸிம்மாஸநத்தமர்ந்து சீர்முகந் தெளிந்து, யாவரும்போற்ற தேவரும் புகழப் பாலனம் புரிவது பெருமையே? ஆயினும், எக்காலம் சத்துருக்கள் வருவார்களோ! அவர் கையில், இவ்விராச்சியம் சிக்காமலிருக்கவேண்டுமே நம் பிரஜைகட்குத் தீங்கு யாதொன்றும் வராதிருக்கவேண்டுமேயென்றும் பலவாறு மதியிற் சிறந்த மந்திரிகளோடு தீர்க்காலோசனை செய்து சாரபுருஷர்களைக்கொண்டு எதிரிகளின் பலாபலத்தையறிந்து அதற்குத் தக்கவாறு தானும் நடந்துகொள்வதில் தேகப்ரிசிரமமும் புத்திபரசிரமமும் எவ்வளவு வேண்டுமென்பதுமற்போதிய யுத்ஸமாசாரங்களைப் படிக்கும் நமக்குத் தெரியாமலிருக்கக் காரணமுண்டா? நம்மை முக்காலத்தும் பாதுகாத்துவரும் நமது சக்ரவர்த்திக்கு இந்த மகாயுத்தத்தில் ஜயம் விளைந்து சீக்கிரமாகவே க்ஷேமங்களுண்டாகவேணுமாய்ப் பகவான் சந்திரமௌளியையும் காமாக்ஷி தேவியையும் சதாகாலம் பிரார்த்திக்கிறேன். ஆகவே, ஆளுகையில் எவ்வளவு சௌக்கியமுண்டாகிறதோ அவ்வளவிற்கவ்வளவு அரசற்கு வருத்தமும் உண்டாகிறதற்குத் தற்காலம் நடக்கும் மகாயுத்தமே அத்தாக்ஷியாகும்.

9. அரசனிடம் அன்புபாராட்ட வேண்டியதேன்? அவ்வன்பு மெத்தகையதாயிருத்தல் வேண்டும்?

அரசன் நம்மிடம் எவ்வளவு பக்ஷமாகவிருக்கிறாரோ

அத்தன்மைபோல் நாமும் அன்புடனிருக்க வேண்டாமா? முதலில் நூலுணர்வாலறிந்ததைக் கூறுவான். தசரதனிடம்ராமனை யழைக்கக் கௌசிகன் வந்த காலத்தில் அன்னவர் பாதங்களில் பணிந்து வந்தகாரிய மென்னை? என்று நல்வரவேற்றிய திங்கு நன்குணர்த்தப்பாலதே!!

कच्चित्कान्तारभाजां भवति परिभवः क्वापि शौवापदो वा
प्रत्यूहे न क्रतूनां न खलु मखभुजो भुञ्जते वा हवींषि ।
कर्तुं वा कच्चिदन्तर्वसति वसुमती दक्षिणः सप्ततन्तुः
यत्संप्राप्तोऽसि किं वा रघुकुलतपसामीदृशोऽयं विवर्तः ॥

இந்திரகுலமே செய்த தவப்பயன்களோருருவாயமைந்து தங்கள் வடிவாய் வந்ததோ எங்கட் கநுக்கிரஹஞ்செய்ய வந்ததை நோக்க வென்மனந் தெளிந்து குளிர்கின்றது. தாங்கள் வந்த விஷயம் சற்றே சொல்லவேண்டும். தாங்கள் தபோவனத்தில் உள்ள தபோதனர்களுக்குக் குரூரமான பிராணிகளிடமிருந்து, ஏதேனும் தொந்தரை யேற்பட்டதா அல்லது, அங்கு நடக்கும் வேள்விகளில் அரக்கர்களினிடரால், தேவர்கட் கவிர்பாகஞ் சரியாக் கிடைக்கவில்லையா? அன்றியும் உலகத்தையே தக்ஷிணையாகக் கொடுக்கத்தக்க வேள்வி யொன்று மனதில் நினைத்திருக்கின்றீர்களா? ஏக்காரணமிவிடம் வந்த விஷயம், எனக்குக் கருணைகூர்ந்து சொல்ல வேண்டும் என்று வினவ அதற்கு வந்த கௌசிகன் கூறினர்—

हुतमिष्टं च तप्तं च धर्मश्चायं कुलस्यते ।
गृहात्प्रति निवर्तन्ते पूर्णकामा यदर्थिनः ॥

உமது குலத்திற்கு, ஹோமங்களும் வேள்விகளும் தவங்களும் தர்மமும் இது ஒன்றுதான் (அதாவது) தமதில்லத்திற்கு வந்த யாசகர் ஒவ்வொருவரும் தனதபீஷ்டங்களை பூர்த்தி செய்து கொண்டு போவதென்பதே யாகும். ஆத

லால் அரசன் என்ற அபிதேயம் உமக்கே பொருந்து மென்றிவ்வாறுள்ள சம்பாஷணையால், பூவுலகையாளும் பூபதிகள் செய்யும் உபகாரத்திற்கு தக்க கைம்மாறு அன்பைத் தவிரவேறெதைக் கூறலாம். மேற் கூறிய கௌசிகனும் அன்புபாராட்டியே யழைத்துச் சென்ற இராமனுக்கும் மற்றுமுள்ள சகோதரர்கட்கும் விவாஹமினிதாய் நடாத்தியதைப் பார்க்க அரசனிடமன்புவைப்பது எவ்வளவு நலமென்பது கூறவும் வேண்டுமோ! தவிரவும் அரசனிடம் அன்புவைக்கவிட்டாமல் நமக்குத் தீங்கு நேரிடுமென்பது திண்ணம். ஏனெனில், ஸந்தியாவந்தனாதிகளை செய்யாதொழிவனாயின் பாபமுண்டு. செய்வதால் பலனில்லை. அதுபோல் அரசனிடமன்புடனிருப்பதால் பயனொன்றும் கிடைக்காவிட்டாலும் அன்பு பாராட்டாவிட்டால் தண்டனையுண்டு. அவ்வன்பும் அரசன் என் செய்யுமோ வென்ற பயத்தோடுகூடவே யிருக்கவேண்டும். காளிதாஸன் மாலவிகாக் நிமித்திரத்தில்,

न च न परिचितो न चाप्यरम्यः चकितमुपैमि तथापि पार्श्वमस्य ।
सलिलनिधिरिव प्रतिक्षणं मे भवति स एव नवो नवोऽयमक्ष्णोः ॥

ஒருவர் மகாராஜாவிடம் செல்லும் பொழுது. கூறுகிறார். இவ்வரசன் நன்றாய்ப் பழகியவன்தான். பார்ப்பதற்கு மிகவும் வடிவழகமைந்தவனாகவே யிருக்கிறான். ஆயினும் ஒவ்வொரு சமயமும் ஒருவனே புதிது புதிதாக தோன்றுகிறான்.

T. N. இராமச்சந்திர சாஸ்திரி.

(இன்னும் வரும்.)

தர்மஸ்வரூபநிரூபணம்.

(முன்தொடர்ச்சி.)

चत्वारो वित्तदायादाः धर्माग्निनृपतस्कराः ।
ज्येष्ठभ्रातावमानेन त्रयः कुप्यन्ति सोदराः ॥

என்று மூத்த உடன் பிறவிக்கொப்பான தர்மத்தை யவமதித்தால் அதற்குதாய பாகிகளான, அக்னி, அரசன், திருடன் என்ற மூவர்களும் சினங்கொள்கிறார்கள்.

இவ்விதமான, தர்மங்களை யறிந்து, யாம், முதன்மையாக நடத்திக் காட்டவேண்டும். அப்படியாயின், அதன் வாயிலாக ஏனையோரும் கைக்கொள்வார்களென்பது உறுதி.

அப்படி நடாவது, உபதேசிக்கமட்டிலும் புகல்வது நீதியல்ல. धर्मक्षेत्रे कुरुक्षेत्रे என்று கீதையின் துவக்கத்தில், சங்கரானந்தர், இங்ஙனம், பொருள் கூறுகிறார்.

அதாவது:—युयुत्सवः என்ற பதத்தாலேயே, பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும், போர் தொடங்கவேண்டியது என்று கருதி, திருதராஷ்டிரனால் किमकुर्वत என்று வினவவேண்டுவது, அநாவசியமாகும்.

அவ்வாறிருக்க:—धर्मक्षेत्रे என்ற பதத்தால், குருக்ஷேத்திரம் தர்மக்ஷேத்திரமானதால் அந்த மகிமையாலாவது, தர்மந்தோன்றி, துர்யோதனன், பாதி ராஜ்யத்தைப் பாண்டவர்களுக்குத் தந்தோ, அல்லது, ஸ்வஜனங்களின் வதை, நரகத்துக்குள்ளாக்கும், என்று போரிலிருந்து தர்மபுத்திரர் விலகியோ, க்ஷேமலாபம் ஏற்படலாமென்ற கருத்தைக் கொண்டே किमकुर्वत என்று ப்ரச்னம் ஏற்பட்டுள்ளது என்று.

இது இவ்வாறிருக்க:—தர்ம சூக்ஷமத்தைமறியாத, நம்மவர்களில் பலர், சமுத்திர கமனம் செய்யவேண்டுமென்

றும், ரஜஸ்வலா விவாகமே, வேதியர்களுக்கு அழகு என்றும், சௌசலக்ஷணமே யரியாத தாங்களே காலத்திற்குத் தக்கவாறு ஸ்மார்த்தாக்களென்று பிதற்றிக்கொண்டும்; அந்நூல்களுக்குப் பொருள் எழுதியும், ஊரூராய்ப் பிரசங்கம் என்று சொல்லிக்கொண்டும், தாறுமாறாய்த் தர்மத்தைச் சொல்லிக்கொண்டும் பண்டிதர்களைத் தனதிகளால் வசப்படுத்திக்கொண்டும், நிற்பயமாய் வெளியிடத் தொடங்குகிறார்கள். ஆயினும் அது முற்றிலும் நிறைவேறாது. இக்கலி தொடங்கி, ஸ்வல்பகாலமே யாகிறது. यावद्वर्णविभागोस्ति यावद्वेदाः कलौयुगे என்று பவிஷ்யத்தில் கூறியபடி பிராம்மணன் முதலான வர்ணங்களும், வேதங்களும் உள்ளவரை, தர்மம், சீர் குலையாது என்று ஏற்படுகிறது. அப்படிக் கெடுவது கலியின் அந்தத்திலேயாகும்.

அப்போது

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

என்று பகவான் அவதரித்து, அதர்மங்களைப் பரக்கடித்து, தர்மங்களை நிலைநாட்டுவார் என்பது உறுதிமொழியே

आचारहीनं न पुनन्ति वेदा यद्यप्यधीताः सह षड्भिरङ्गैः।
छन्दां स्येनं मृत्युकाले जहन्ति नीडं शकुन्ता इव जातपक्षाः ॥

என்ற வஸிஷ்ட வசனத்தால் ஏற்படுகிறதாவது.

ஸாங்கமாக ஸகல வேதங்களைக் கசடறக் கற்றிடினும் ஆசாரமொன்றைக் கைவிட்டார்களாயின், அவர்களை வேதங்கள் பரிசுத்தராகச் செய்வதில்லை. இறக்கைகள் முளைத்தவுடன் எப்படிப் பறவைகள் கூட்டை விட்டுவிடுமோ அங்ஙனமே மரணகாலத்தில் இவர்களை வேதங்கள் கைவிடும். ஆகையால் தர்மாநுஷ்டானந் தவறினால் அநர்த்தம் விளையும் என்று நம்பி நடத்தல் வேண்டும்.

இனி அத்தர்மானுஷ்டானத்தின் பயனை விசாரிப்போம்.

सर्ववर्णानां स्वधर्मानुष्ठाने परमपरिमितं सुखं ततः परिवृत्तौ, कर्मफलशेषेण, जातिं रूपं वर्णं बलं मेधां प्रज्ञां द्रव्याणि धर्मानुष्ठानमिति प्रतिपद्यते । तच्च क्रवदुभयोर्लोकयोरसुख एव वर्तते ॥

என்று, ஸர்வ வர்ணத்தாரும் வர்ணாசிரமத்துக்குத் தக்கவாறு, நடத்துவரின் அழிவில்லாத சுவர்க்காதிசுகம் ஏற்படும். இம்மட்டிலுமல்ல. புண்யகர்மம் க்ஷீணித்து இவ்வுலகில் ஜநிக்கும்போது கர்மசேஷத்தால் உயர்ந்த ஜாதி, ரூபம், வர்ணம் பலம், தாரண சக்திபெற்ற மேதை, புதிதுபுதிதாகத் தோன்றுந் தன்மை வாய்ந்த பிரக்ஞை தர்மாநுஷ்டானத்தில் ஊக்கம் இவை யமைகின்றன. சுழலும் சக்கிரம்போல் இவ்விதம் மாறிமாறிவரும்போது இகத்திலும் பரத்திலும் சுகஹேதுவாகவே இருக்கிறது என்று ஆபஸ்தம்பர் மொழிந்திருக்கிறார். தைத்திரீயத்தில் தர்மமானது ஸமஸ்த ஜகத்துக்கும் பிரதிஷ்டாஹேதுவாகிறது. தர்மங்களை யறிவதற்கு யாவரும தர்மத்தைக் தவறாது நடத்துகிறவரை யண்டுகிறார்கள். தர்மத்தாலேயே பாவங்களைவிலக்க ஸாத்யமாகிறது. மற்ற காரணத்தால் ஸாத்யமாகாது. ஆகையால் தர்மத்திலேயே எல்லாம் நிலை பெற்றிருக்கின்றன. ஆகையால் தர்மத்தையே சிறந்த பொருளாக முனிவர்கள் புகழ்கிறார்கள் என்னும் கருத்து வெளியாகிறது. சாந்தோக்கியத்திலும் தர்மானுஷ்டானஞ் செய்கிறவர்களுக்கு புண்ய லோகங்கள் கிடைக்கின்றன என்று உரைக்கப் பட்டிருக்கிறது. இங்ஙனமே பகவத்கீதை 18-வது அத்தியாயம் 8-வதுச் சுலோகம்

यज्ञो दानं तपः कर्म न त्याज्यं कार्यमेव तत् ।
यज्ञो दानं तपः कर्म पावनानि मनीषिणाम् ॥

என்று சாந்தோக்யத்தை யனுஸரித்தே போதிக்கிறது. ச்ரௌதமாயும் ஸ்மார்த்தமாயும் உள்ள யக்ஞம் ஸத்பாத்திரங்களிற் கொடை, அத்தியயனம் என்று மூன்று விதமான கர்மாவானது கிருகஸ்தனுக்கு விடத்தகாதது. அவைகள் பாவனங்களாகும். அதாவது எல்லா பாவங்களையும் தொலைத்து மனதிற்குத் தெளிவை யுண்டுபண்ணி உத்தமபலனை கொடுக்கக் கூடியவைகளாகின்றன.

ஜீவன் உத்கரமணத்தை யடைந்து பரலோகத்திற்குப் புறப்படும்போது புத்திரன், மனைவி, அத்தான், அம்மாஞ்சி முதலிய உறவினர்கள் பின் வரமாட்டார்கள். தர்மம் ஒன்றுதான் பின்தொடரும். சரீரத்தைவிட்டு ஆவிகள் வெளிக்கிளம்பும் கணத்திலேயே அசுத்தம் என்று அதை யடக்கம் செய்ய ஏனையோரும் முயன்று எரித்து விடுகிறார்கள். அப்போது வேறு துணைவரில்லாமல் ஜீவன் தர்மமொன்றையே துணையாகக் கொள்கிறது. அந்தோ இப்படித் தலைகாத்து ரக்ஷிக்கும் தர்மத்தைச் சிந்தியாது சரீரபோஷணையைமட்டிலும் முற்றிலும் பெரிதாகவெண்ணி தர்மத்தை வழுவவிடுகிறோம்.

வர்ணங்களுக்குள் பிராம்மண ஜந்மாவானது இம் மண்ணுலகத்தில் க்லேசத்திற் கிடமாயிருப்பினும் விண்ணுலகில் அளவிலா சுகலாபத்திற்குக் காரணமாகிறது. வேதமானது புருடர்களின் காமனைக்குத் தக்கவாறு ஸாதனங்களையோதுவதால் பற்பல சுகங்கள் பெற ஸாத்தியமாகிறது.

K. V. ஸுப்பிரமணிய சாஸ்திரி.

(இன்னும் வரும்.)